டெஹியோவிட்ட பிரதேச சபை - 2022

---------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

டெஹியோவிட்ட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் டெஹியோவிட்ட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பெறவேண்டிய் ரூபா 139,640 வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அது ரூபா 149,360 ஆக மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டில் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 800,000 ஆன பேலர் இயந்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு இறுதிக் கணக்கில் செம்மையாக்குவதாக. | - மேற்படி - |
| (இ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பரிமாற்ற வேண்டிய முத்திரைக் கட்டண வைப்பு ரூபா 691,752 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2022 ஆண்டிற்காக 2023 ஆண்டில் செலுத்தியிருந்த ரூபா 55,200 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | கடந்த ஆண்டு படிகளிற்காக செலுத்திய ரூபா 88,424 தொகை மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | ரூபா 12,365 ஆன புத்தக பற்றாக்குறையை அறவிட வேண்டிய மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கணக்கு விடயங்களில் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதி நிலவிய மீதி, அதற்குரிய துணையேடுகளில் அத்திகதியில் நிலவிய மீதியுடன் இணக்ஞ் செய்கையில் ரூபா 9,583,483 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சரியான மீதிகளை உறுதி செய்து செம்மையாக்கம் செய்வதாக. | நிதிக்கூற்றுக்களிலான மீதி, அதற்குரிய துணையேடுகளுடன் இணக்ஞ் செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 8,786,337 ஆன 02 நிலையான சொத்து விடயங்களில் மற்றும் 02 நடைமுறை சொத்து விடயங்களை உறுதி செய்து கொள்ள தேவையான அட்டவணைகள் சமர்பிக்கப்படவில்லை. | சொத்துக்களை ஒப்பாய்வு செய்து சரியான மீதியை செம்மையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின்<br><br>i. நி.பி. 571 | 2015 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 1,035,058 ஆன 60 வைப்புக்களை தீர்த்திருக்கவில்லை. | தேவையான வைப்புக்களை நிறுத்திக் கொள்ள மற்றும் எஞ்சியதை மீள் செலுத்துவதாக | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 8,639,872 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 6,398,846 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | **2022** | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப் பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் வரி | 4,573,000 | 4,783,327 | 4,906,095 | 3,969,913 | 7,280,000 | 4,958,225 | 4,930,471 | 4,146,416 |
| வாடகை | 13,410,400 | 12,733,800 | 11,956,293 | 5,893,625 | 12,847,710 | 11,435,605 | 9,078,915 | 5,177,840 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 505,200 | 435,548 | 463,548 | - | 445,200 | 385,262 | 385,512 | - |
| ஏனைய வருமானம் | 6,403,800 | 9,003,177 | 8,014,503 | 1,039,357 | 5,490,000 | 7,824,532 | 6,661,633 | 508,856 |
| | 24,892,400 | 26,955,852 | 25,340,439 | 10,902,895 | 26,062,910 | 24,603,624 | 21,056,531 | 9,833,112 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரைகள** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | வீதவரி, ஏக்கர் வரி மற்றும் கடைவாடகை ஆகிய வருமான விடயங்களில் 2022 திசெம்பர் 31 திகதிக்கு ரூபா 10,069,305 அறவிட வேண்டியதாக இருந்தது. அப் பெறுமதியினுள் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலாக காலம் பழைய ரூபா 5,959,466 ஆன மீதியும், 05 ஆண்டுகளை விஞ்சிய பழைய ரூபா 2,288,046 ஆன மீதியும் இருந்தன. | நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |
| (ஆ) | டெஹியோவிட்ட வியாபார கட்டிடத் தொகுதியில் 2015 ஆண்டில் குத்தகை வழங்கிய 06 கடையறைகளிலிருந்து மற்றும் 2021 ஆண்டில் குத்தகை வழங்கிய 03 கடையறைகளிலிருந்து ரூபா | ஒரே தடவை முற்பணத்தை அறவிட மற்றும் உடன்படிக்கை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஒரே தடவை முற்பணத்தை அறவிடவும், குத்தகை உடன்படிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | 6,418,500 ஆன ஒரே தடவை முற்பணத்தை (key money) அறவிட்டிருக்கவில்லை. அவ்வாறே, அங்கு காணப்பட்ட 27 கடையறைகளில் 26 இற்கு வருடாந்த குத்தகை உடன்படிக்கை செய்திருக்கவில்லை. | | செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நிலையான அறவித்தல் பலகை 09 இலிருந்து மற்றும் 89 விளம்பரப் பலகைகளிலிருந்து ரூபா 203,650 ஆன கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 அறிவித்தல் பலகைக்காக பதிவேடொன்று தயாரித்து கட்டணம் அறவிடுவதாக. | அறிவித்தல் பலகை கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 13 முச்சக்கர வண்டி தரிப்பிட்ங்களில் இருந்து 2021 மற்றும் 2022 ஆண்டிற்காக ரூபா 236,500 ஆன வருமானத்தை அறவிட 2021 ஒக்டோபர் 22 திகதிய இலக்கம் 2251 கொண்ட வர்த்தமானியின் (iv)(ஆ) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முச்சக்கர வண்டி தரிப்பிடங்களிற்காக சபைக்கு சொந்தமான இடம் இல்லாத பிரதேசங்களில் அக் கட்டணத்தை அறவிட முடியாதுள்ளதாக. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரைகள** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத் தொகை ரூபா 18,008,107 ஆன 06 நிலையான வைப்புக்களை காலம் நிறைவடைய 08 நாட்களிற்கும் 70 நாட்களிற்கும் இடையிலான காலமொன்று இருக்கையில் கூடிய நிலையான வைப்பு வட்டி வீதத்தின் கீழ் முதலீடு செய்ய தீர்மானித்ததால் சபைக்கு ரூபா 281,098 ஆன வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்துவதாக. | பெற வேண்டிய வருமானத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | கணக்குகளிற்கு இடையில் பணம் பரிமாற்றுவதாக குறிப்பிட்டு ரூபா 235,897 ஆன வரவு மீதியொன்று 2018 ஆண்டு முதலும், ரூபா 2,130,953 ஆன செலுத்த வேண்டிய வெட் வரித் தொகையொன்று 2013 ஆண்டு முதலும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதும், அவற்றை தீர்த்திருக்கவில்லை. | மீதியை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | ரூபா 43,088 மீதியுடனான வங்கி நடைமுறைக் கணக்கொன்று 20 ஆண்டுகளிற்கு அதிக காலமாக செயலற்று காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | 2012 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் இனங்கண்ட 68 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக 1982 இன் 04 இலக்க நகர அபிவிருத்தி | நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செலவிட முடியாததால் அனுமதியற்ற | குறித்த சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | அதிகார சட்டதித்தின் 23(5) பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 61 நிர்மாணங்கள் தொடர்பாக அகற்றல் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்த போதும், பின்னூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணதாதர்களுக்கு கட்டளை விநியோகிப்பதாக. | வேண்டும். |
| (உ) | வேலை கடன்படுனர் மீதியினுள ஆண்டு 01 இற்கும் 05 இற்கும் இடையிலான காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 8,735,253 ஆன மிதியை அறவிட்டிருக்காததுடன் நானாவித கடன்கொடுனர் மீதியினுள் ஓராண்டை விஞ்சிய ரூபா 9,428,645 ஆன மீதியை தீர்த்திருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக. | மீதியை தீர்க்க வேண்டும். |
| (ஊ) | 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் சட்ட பிரகாரம் 16 உறுப்பினர்களால் முதலாம் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தலை வழங்கி இருக்காததுடன் 15 உறுப்பினர்களால் அந்த வருடாந்த வெளிப்படுத்தலை வழங்கி இருக்கவில்லை. | அவ் உறுப்பினர்களுக்கு நினைவூட்டல் அனுப்பியதாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 11/2010 இலக்க உள்ளூராட்சி மறுசீரமைப்பு சுற்றறிக்கையின் 3.7 பந்திக்கு மாற்றமாக, பிரதேச சபை கேட்போர் கூடத்தை 2015 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 10 சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. | தவிசாளரின் அங்கீகாரத்தின் மீது இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் கட்டணம் அறவிடப்படுகிறது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்க பொருந்தாது, பிரதேச சபைக்கு சொந்தமான 194 பாதைகளை வர்த்தமானியில் பிரசுரித்திருக்கவில்லை. பாதைகள் இன்வென்றி பதிவேட்டையும் 2014 ஆண்டின் பின்னர் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | GIS தொழில்நுட்பத்தால் வரைபடப்படுத்தி பாதைகளை இன்வென்றிப்படுத்த மற்றும் பாதைகளை வர்த்தமானியில் பிரசுரித்தல் மேற்கொள்வதாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2013 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை உப பிரிப்பிற்கு அங்கீகாரம் வழங்கிய 12 காணிகளிற்குரியதாக 21 ஏக்கர்கள் அளவு பாதை பிரதேசங்களை சபைக்கு சுவீகரித்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | காணிகயொன்றை பிரித்து விற்பனை செய்யவதற்காக அங்கீகாரம் வழங்கியது தொடர்பிலான காணி ஒன்றின் பரிசோதனையின் போது அங்கு | இது அங்கீகாரமின்றி பிரித்த காணி ஒன்றாகும். விண்ணப்ப குறைபாடுகளை பூர்த்தி | அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக சட்ட பிரகாரம் |

| | | |
|---|---|---|
| காணப்பட்ட அனுமதியின்றி நிர்மாணிக்கப்பட்ட 12 வீடுகளிற்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செய்யுமாறு காணி உரிமையாளருக்கு அறிவிப்பதாக. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| வாகனமொன்றின் இயந்திர திருத்தத்திற்காக தெரிவு செய்த நிறுவனத்தின் விலை மனுவை பரிந்துரைக்க டிபோ பொறியியலாளர் ஒருவருக்கு முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், அவரின் பரிந்துரை கிடைக்க முன்னர் தெரிவு செய்த நிறுவனத்திற்கு ரூபா 520,000 ஆன பெறுகைகளை ஒப்படைத்திருந்து. | டிபோ பொறியியலாளரின் பரிந்துரை இல்லாத போதும், அவரின் பரிந்துரைகளுக்கு இணங்க திருத்தத்தை மேற்கொண்டு நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | பெறுகைகள் விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆண்டில் அன்பளிப்பாக கிடைத்த ரூபா 2,594,999 ஆன கொம்பெக்டர் டேலர் கிடைத்த திகதி முதல் விளைவற்று காணப்பட்டது. | கொம்பெக்டரிற்கு குப்பைகளை வேறாக்கி சேர்க்க முடியாமை மற்றும் திண்மக் கழிவு மத்திய நிலையத்திற்கு செலுத்திச் செல்லும் கடினம் காரணமாக பயன்படுத்துவதில்லை. | சொத்துக்களை பயன்பாடின்றி வைக்கக் கூடாது. |
| (ஆ) | ஓர் நோயாளர் வண்டி மற்றும் ஓர் பொப் கெட் இயந்திரமும் 2017 திசெம்பர் 21 திகதி இலக்கம் 02/2017 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2.1 பந்தி பிரகாரம் சுவீகரித்திருக்கவில்லை. | இச் சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கபடும் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அப்பாஸி வத்த காணியிலிருந்து பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கிய 07 ஏக்கர் அளவான பகுதியை சபைக்கு சுவீகரித்திருக்கவில்லை. | அக் காணித்துண்டை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக. | அதனை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|
| கிராமமொன்றின் ஊடாக நீர் கருத்திட்டமொன்றை நிர்மாணிக்கும் முதலாம் கட்டமாக நிர்மாணித்த கிணற்றின் நீர் பாவனைக்கு உகந்ததல்லாதிருந்தது. இதனால் | பொறியியலாளர் ஒருவரின் ஆலோசனையின் மீது கிணற்றை சுற்றி மணல் வடிகட்டியொன்றை (Sand | செலவிட்ட தொகைக்கு போதிய பயன்பாடொன்று கிடைக்க |

| | | | |
|---|---|---|---|
| | கிணற்றை நிர்மாணிக்க மேற்கொண்ட ரூபா 909,710 விளைவற்ற செலவாக இருந்ததுடன் நீர் கருத்திட்டத்தின் எஞ்சிய எந்த நடவடிக்கையும் 2022 செப்டம்பர் வரை மேற்கொண்டிருக்கவில்லை. | Filter) தயாரித்து அதன் நீர் மாதிரியை பரிசோதனைக்காக அனுப்பியுள்ளதுடன் இவ் உடன்படிக்கையை இருதரப்பினதும் ஒருமைப்பாட்டுடன் இறத்துச் செய்துள்ளதாக. | வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரைகள | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் சாரதிகளாக ஏனைய பதவிகளில் கடமையாற்றும் 09 பேர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சாரதி பதவியை அங்கீகரித்துக் கொள்ள கோரிக்கை விடுத்த போதும் அங்கீகாரம் கிடைக்கவில்லை. | தேவைக்கேட்ப வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | வருமான பரிசோதகர் பதவியில் 02 வெற்றிடத்திற்காக 2020 ஆண்டு முதல் இரண்டு தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | வருமான பரிசோதகர் பதவியில் வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு கோரிக்கை கடிதம் அனுப்பியுள்ளதாக. | - மேற்படி - |
| (இ) | ஆளணியினரை அதிகரித்துக் கொள்ள முடியாததால் 2014 – 2022 ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் சேவை உடன்படிக்கை மீது 25 பேர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | புதிய பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள அங்கீகாரம் கிடைக்காததால் சேவை தேவைப்பாட்டின் மீது அவர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாக. | - மேற்படி - |